**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 284/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | **திரு . அம்பேத்கார் (தலைமை காவலர்)** |
| Father's/Husband Name: | **திரு. முத்துசாமி** |
| Village : | அரும்பாவூர் காவல் நிலையம் |
| Taluk : | **அரும்பாவூர்** |
| Age : | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரி கருணாநிதி ஆஜர் இல்லை. அவருக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

முதல் விசாரணை

i) நான் தற்போது அரும்பாவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.05.2019ம் தேதி அன்று அரும்பாவூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக செந்தமிழ்ச்செல்வி என்பவர் பணியிலிருந்தார். அவர் தற்போது பணிமாறுதல் பெற்று வேறுமாவட்ட காவல் நிலையத்தில் பணி செய்து வருவதாலும் தரப்பினர் தங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டதாலும் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபருக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 13.05.2019ம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்த வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அ.சா.1யை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதனை பரிசீலனை செய்து அரும்பாவூர் காவல் நிலைய குற்ற எண் 99/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 324ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **அ.சா.1**

**கொடுத்த புகார் அ.சா.ஆ2 ஆகவும், நிலையத்தில் பதிவு செய்துள்ள முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் செந்தில்குமார், சசிக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் சுந்தரி, தனபாக்கியம், கனகா, கண்ணகி, செந்தில்குமார், சசிக்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை கடந்த 13.05.2019ம் தேதியன்று கைது செய்து தக்க காவல்நிலையத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார். அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவந்த் என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் இரண்டு பெறப்பட்டது. சுந்தரி என்பவருக்கு வழங்கப்பட்ட **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் இரண்டு அ.சா.ஆ6 மற்றும் அ.சா.ஆ7ஆகவும்,** பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த **சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(b), 323, 326 r/w 4 of TNPHW Actன்படி கடந்த 31.05.2019ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய் புகார் வாக்குமூலத்தை சரியாக விசாரணை செய்யாமல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமலேயே அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை புலன் விசாரணையில் சொல்லியது போல கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.